சட்டப்பேரவை விதி 110–ன்கீழ் 3–4–07 அன்று மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் படித்தளித்த அறிக்கை.

....

தேனி மாவட்டத்தில்,அல்லி நகரம் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள அனைவருக்கும் கல்வி இயக்க வட்டார வள மைய அலுவலக அறை பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு வினாத்தாட்கள் கட்டுக் காப்பகமாக செயல்பட்டு வந்தது. இந்த அறையின் பின்புறத்தில் ஜன்னல் கம்பிகள் உடைக்கப்பட்டு இருந்ததாக மேல்நிலைப் பொதுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் மையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த தேனி முதன்மைக் கல்வி அலுவலருக்கு 2.4.2007 அன்று மாலை 6.00 மணியளவில் தொலைபேசி செய்தி பெறப்பட்டது. உடனே முதன்மைக் கல்வி அலுவலர் வினாத்தாட்கள் கட்டுக் காப்பாளர் இருவருடன் வினாத்தாள் கட்டுக் காப்பக அறையைத் திறந்து பத்தாம் வகுப்பு வினாத்தாட்கள் வைக்கப்பட்டுள்ள பீரோவைத் திறந்து பார்த்தபோது கடைசித் தேர்வான பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடத்தின் இரண்டு வினாத்தாள் கட்டுகள் வெளிக்கவர் மற்றும் உட்கவர் பிரிக்கப்பட்டிருந்தது. பிரிக்கப்பட்ட கட்டுகளில் இருந்த வினாத்தாட்களை எண்ணிப் பார்த்தபோது ஒவ்வொரு கட்டிலும் ஒரு வினாத்தாள் குறைந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே, 5.4.2007 அன்று நடைபெறவிருந்த பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடத்தின் வினாத்தாள் வெளியாகி இருக்க வாய்ப்புள்ளதால், அப்பாடத்திற்கு புதிய வினாத்தாட்கள் அச்சிட்டு 11.4.2007 புதன்கிழமை அன்று தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி உட்பட 2634 தேர்வு மையங்களிலும் சமூக அறிவியல் பாடத்திற்கான தேர்வு நடத்த அரசு முடிவெடுத்துள்ளது.

இந்நிகழ்வு குறித்து தேனி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.